<u>சுருக்கம்</u>

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு மதிப்பூதியம் வழங்குதல் மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்களுக்கான அமர்வுத் தொகையினை உயர்த்தி வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பரா.4) துறை

**அரசாணை (நிலை) எண்.54** **நாள்: 29.6.2012.**

திருவள்ளுவர் ஆண்டு 2043 ஆனி 15

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண். 101, ஊரக வளர்ச்சி (சி3) துறை, நாள் 27.3.1997.
2. அரசாணை (நிலை) எண். 362, ஊரக வளர்ச்சி (சி1) துறை, நாள் 20.12.1997.
3. அரசாணை (நிலை) எண். 258, ஊரக வளர்ச்சி (சி4) துறை, நாள் 14.12.1999.
4. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கடித எண்.57069/பரா–1/2011, நாள் 22.07.2011.

2. தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டம், 2012 (தமிழ்நாடு சட்டம், 15, 2012).

---

**<u>ஆணை:</u>**

மாண்புமிகு அமைச்சர் (நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சி) அவர்கள் 2011–2012–ஆம் நிதியாண்டிற்கான ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறைக்கான மானியக்கோரிக்கையின்போது சட்டப்பேரவையில் கீழ்காணும் அறிவிப்புகளை வெளியிட்டார்கள்:–

i. " கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சியின் செயல் அலுவலர்களாகவும் இருந்து பொறுப்புகளைக் கவனித்து வருகின்றனர். அவர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்பட வேண்டும் என்ற நீண்ட நாள் கோரிக்கையினை இந்த அரசு கனிவுடன் ஏற்று, மாதந்தோறும் 1,000 ரூபாய் மதிப்பூதியமாக வழங்கும். நடப்பாண்டு முதல் இது நடைமுறைப்படுத்தப்படும். இதற்காக இந்த ஆண்டு 15 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்."

ii. "ஊராட்சிக் கூட்டத்தில் ஊராட்சித் தலைவர்கள் கலந்துகொள்ள இதுவரை வழங்கப்பட்டு வந்த 50 ரூபாய் அமர்வுப்படியினை 100 ரூபாயாக உயர்த்தியும், அதே போல, ஊராட்சி உறுப்பினர்களுக்கு இதுவரை வழங்கப்பட்டு வந்த 25 ரூபாய் அமர்வுப்படியினை 50 ரூபாயாக உயர்த்தியும் இந்த அரசு இந்த ஆண்டு முதல் வழங்கும். இதற்காக நடப்பாண்டில் 7.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும்.

2. மேற்கண்ட அறிவிப்பின் அடிப்படையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரிடம் இருந்து கருத்துருகோரி பெறப்பட்டது. கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு தற்போது மாதம் ரூ.500/– பயணப்படியாகவும், அமர்வுக்கட்டணமாக ரூ.50/–ம் வழங்கப்பட்டு

வருகிறது. ஆனால் மதிப்பூதியம் ஏதும் வழங்கப்படவில்லை. கேரளா, ஆந்திரபிரதேசம் மற்றும் கர்நாடகா ஆகிய அண்டை மாநிலங்களில் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு மதிப்பூதியம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே கிராம ஊராட்சித் தலைவர்களுக்கு ரூ.1,000/– மதிப்பூதியம் வழங்குமாறும் மற்றும் தற்போது ஊராட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டு வரும் அமர்வுத் தொகை ரூ.50–லிருந்து ரூ.100 ஆகவும் ஊராட்சி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுவரும் அமர்வுத் தொகை ரூ.25–லிருந்து ரூ.50/– கூடுதலாக வழங்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரின் கருத்துருவினை அரசு நன்கு பரிசீலனை செய்து ரூ.22.53 கோடிக்கு கீழ்கண்டவாறு ஒப்பளிப்பு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

**i. மதிப்பூதியம்.**

| | |
|---|---|
| 12,524 பஞ்சாயத்து தலைவர்களுக்கு தலா ஒரு மாதத்திற்கு ரூ.1,000/– வீதம் 12 மாதங்களுக்கு | ரூ.15.03 கோடி |
| | |

**ii. அமர்வுத் தொகை**

| | | |
|---|---|---|
| i) | 12,524 பஞ்சாயத்து தலைவர்களுக்கு தலா ஒரு மாதத்திற்கு ரூ.100/– வீதம் 12 மாதங்களுக்கு<br><br>(ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) | ரூ.1.50 கோடி |
| ii) | 1,00,000 பஞ்சாயத்து வார்டு உறுப்பினர்களுக்கு தலா மாதம் ஒன்றுக்கு ரூ.50 வீதம் 12 மாதங்களுக்கு<br><br>(ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) | ரூ.6.00 கோடி |
| | மொத்தம் | **ரூ.22.53** கோடி |

மேற்கண்ட செலவினம் மாநில நிதிக் குழு பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளின்படி மாநில நிதிக் குழு மான்யம் மற்றும் கிராம பஞ்சாயத்துக்களின் சுய நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.

4. அதன்படி, 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 82–ன் காப்புரையின் கீழ் கிராம ஊராட்சித் தலைவர்களுக்கான மாத மதிப்பூதியமாக ரூபாய் ஆயிரத்தை அரசு நிர்ணயம் செய்கிறது.

5. மேலும், 1994ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம், பிரிவு 82 உடன் இணைந்த 1999ம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (பயணப்படி மற்றும் இதர படிகள், கிராம ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியக் குழு தலைவர்கள் மற்றும் ஊராட்சிகளின் உறுப்பினர்கள் மற்றும் அவைகளின் குழு உறுப்பினர்களுக்கு வழங்குவது) விதிகளில் விதி 8(i)–ன் கீழ், அரசாணை (நிலை) எண்.362, ஊரக வளர்ச்சி (சி1) துறை, 20.12.1997ல் பகுதி அளவு மாற்றம் செய்து, கிராம ஊராட்சி தலைவர்களுக்கான அமர்வுத் தொகையாக ரூபாய் நூறு (ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) எனவும் கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு அமர்வுத் தொகையாக ரூபாய் ஐம்பது (ஒரு மாதத்தில் இரண்டு அமர்வுகளுக்கு மிகாமல்) எனவும் அரசு நிர்ணயம் செய்கிறது.

6. மேலே பத்தி 3ல் ஆணையிடப்பட்ட நிதியினை உரிய வழிமுறைகளின் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்பு வாரியாக, மாவட்ட வாரியாக ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையரால் அளிக்கப்படும் நிதி ஒதுக்கீட்டினை மாவட்ட ஆட்சித் தலைவர் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளுக்கு விடுவிப்பு செய்யவேண்டும். மேற்கண்ட தொகையினை பெற்று மாவட்டங்களுக்கு விடுவிக்க ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வாணை 2011 உள்ளாட்சி தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பதவி ஏற்ற நாளான 25.10.2011 முதல் நடைமுறைக்கு வரும்.

8. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.205/JS(PM)/12 நாள் 28.6.2012ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நா.ச.பழனியப்பன்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையாளர், சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
அனைத்து மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குநர்கள்.
அனைத்து மாவட்ட உதவி இயக்குநர் (ஊராட்சிகள்)
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை – 35.
ஆணையர் (கரூவூலம் மற்றும் கணக்குகள்), சென்னை – 15.
அனைத்து மாவட்ட ஊராட்சிகள் / வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட கருவூலங்கள் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் மூலமாக)

**நகல்:–**
மாண்புமிகு அமைச்சர் (ந.நி.(ம)ஊ.வ) அவர்களின் சிறப்பு / முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 9.
நிதி (ஊரக வளர்ச்சி) / சட்டத் துறை, சென்னை – 9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா. I, II, III மற்றும் வ.செ.(ம)ஒ.துறை,
இருப்பு கோப்பு / உதிரி நகல்
//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.